557

விலை 0—1—3 "UDAYAM" Weekly. Reg. No.




வார வெளியீடு. ஆசிரியர் :— M. கந்தசாமி

மலர் 1 | திருவத்திபுரம் 24—11—46 வியஹு கார்த்திகைமீ 9உ ஞாயிறு | இதழ் 17

# இயந்திரமும் மக்கள் முன்னேற்றமும்

(M. M. V.)

இயந்திரங்கள் கூடாது, கையினால் செய்யப்படும் தொழில்தான் வளர்ச்சியடைய வேண்டும்; கை ராட்டினமும் தக்கிளியும்தான் இந் நாட்டுக்கு கதிமோட்சத்தையளிக்கவல்லது என்று கூறும் தேசியத் தோழர்கட்கு வீர சவர்க்கார் "பிரீ ஹிந்துஸ்தா"னில் தீட்டியுள்ளதை கீழே தருகிறோம்.

"இந்தியாவில் இயந்திரங்களின் காலம் இப்பொழுது. ஐரோப்பாவில் 18-ம் நூற்றாண்டில் ஆரம்பமாயிற்று. இப்துறையில் நம் நாடு ஐரோப்பாவைவிட இரண்டு நூற்றாண்டு பின்னணியிலேயிருந்துவருகிறோம். ஐரோப்பாவில் இயந்திரங்கள் புகுத்தப்பட்டக் காலத்தில் எத்தகைய எதிர்ப்புகள் பயமுறுத்தல்கள் தோன்றிற்றோ அவைகள்யாவும் இன்று இங்கும் காணப்படுகின்றன. மூட நம்பிக்கை—பழமைப்பித்து தலைவிரித்தாடிற்று, அதுபோல் இங்கும் தலைவிரித்தாடுகிறது "இயற்கையைத் திரும்பிப்பார்" என்ற கூச்சல் கிளம்பிற்று. இயந்திரங்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரித்து சமுதாயத்தை குலைத்துவிடும் என்று கூச்சலிட்டார்கள் பரம்பரையின் வழித்தோன்றல்களாகிய பொருளாதார நிபுணர்கள். இயந்திரங்கள் பேய்களின் வலையென்றும், இது ஆண்டவனின் மகிமையை கெடுக்க வந்தவைகள் என்றும் பூசாரிகள் பறைசாற்றினார்கள்.

இயந்திரம் மனித சமுதாயத்தை அழிக்கும் கருவியென்றும், மதத்தைத்தாக்கும் பிசாசு என்றும் மக்களை பயமுறுத்தினார்கள். மனிதனை இருதயமற்றவனாக, கல்நெஞ்சனாக, இயந்திரம் போன்ற நடைப்பிணமாக ஆக்கிவிடும் என்று அஞ்சினார்கள். இயந்திரங்கள் கண்டுபிடிப்பதிலே மனிதன் தனது அறிவைத் தேடிக்கொள்வான் என்று கருதப்பட்டது.

ஆனால் இவர்களின் கூற்றில் ஒன்றேனும் பலிக்கவில்லை. இன்று ஐரோப்பில் இத்தகைய கூற்றுகளுக்கு மறுப்பு தேடவேண்டிய அவசியத்தில் இல்லை. இத்தகைய பயமும், தீர்க்க தரிசனங்களும் நம் நாட்டுக்கு புதியவைகள். ஆதலால் அவைகளை எதிர்க்கவேண்டியது அவசியமாகும். 18-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் மூட நம்பிக்கைகளை எதிர்க்க எத்தகைய நடவடிக்கைகளை எடுத்தார்களோ அதையே நாமும் எடுக்கவேண்டும்.

மூட நம்பிக்கை எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக மனதில் பதிந்திருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு விஞ்ஞான ஆராய்ச்சியில் அறிவு செல்லுவதில்லை. 18-ம் நூற்றாண்டில் போர்ச்சுகலில் பூகம்பம் தோன்றியது. ஆண்டவனின் கோபம் தான் இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது. போப்பாண்டவரை எதிர்த்த ப்ராட்டெஸ்டெண்டு கிறிஸ்தவர்கள் தான் இதற்குக் காரணம் என்று நம்பப்பட்டது. அத்தகைய நம்பிக்கை இப்பொழுது இந்தியாவிலும் இருந்துவருகிறது.

நாம் 20-ம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்தாலும் நமது எண்ணங்கள் செயல்கள் யாவும் 17-ம் நூற்றாண்டின் தன்மையதாகவே யிருக்கிறது. இதைக் குறித்து மதத்தலைவர்கள் சிறிதும் சிந்திப்பதில்லை, விஞ்ஞான ஆராய்ச்சியில் அறிவை செலுத்துவதில்லை."

மக்கள் விஞ்ஞானத்துறையில் முன்னேறுவதினால்தான் சமுதாயம் முன்னேற முடியுமேயல்லாது மூட நம்பிக்கையை வளர்ப்பதினால் அல்ல. இந்நாட்டிலும் மூடக்கொள்கையை எதிர்த்து வெற்றி பெற்றவர்கள் இல்லாமல் இல்லை. நானா பார்னவிஸ் என்பவரைக்குறித்து கேள்வியுற்றிருக்கலாம். அவர் மகாராஷ்டிர அரசியல் வாதிகளில் சிறந்தவர். இவர் அறிவில் பிரிட்டிஷாரைவிட மேம்பட்டு விட்டார். கங்கா நதியில் ஒரு பாலம் கட்டவேண்டியிருந்தது. மணலில் அஸ்திவாரம் போடுவது கஷ்டமாகயிருந்தது. ஆதலால் கங்காதேவியைக் குறித்து வரம் கேட்டார்கள், உதவிபுரியும்படி வேண்டினார்கள். இந்த முயற்சிகளால் ஒன்றும் பலன் கிடைக்காது என்று சொல்லிவிட்டு, மணல் வாரியைக் கொண்டுவந்து வேலையைத் துவக்கினார். பூஜையும் தவமும் செய்யமுடியாத காரியத்தை இயந்திரம் செய்து முடித்தது. கங்கா நதியினால்—கங்கா தேவியினால் பாலம் கட்டுவதைதடுக்க முடியவில்லை. மிக எளிதில் பாலம் கட்டி முடிக்கப்பட்டது.

நாம் செய்யும் காரியம் சரியனதாகவும் அறிவோடு கூடியதாகவும் இருந்தால், நாள்—நட்சத்திரத்தைக் குறித்து கவலை கொள்ள வேண்டியதில்லை. பிராணவாயும் ஜலவாயும் சரியான அளவுப்படி சேர்ந்தால் நீராவியாகமாறி விடுகிறது. இதற்கு நாள் நட்சத்திரம் தேவை யில்லை; வருஷத்தில் எந்தகாலத்தில் சேர்ந்தாலும் நீர் காணத்தான் செய்யும். எந்த காரியம் செய்வதென்றாலும் சோதிடனை நாடிச்செல்வது இந்த நாட்டில் தான் முதல் முக்கிய வேலையாகயிருந்து வருகிறது. ஒருவன் வீட்டை எவ்வளவு நல்ல முறையில் உறுதியாக கட்டியிருந்தாலும் சரியே அதைக்குறித்து அதிகமாக கவலை கொள்வதில்லை; வீட்டில் குடிபுகுவதற்கு தைரியம் பிறப்பதில்லை; சோதிடனை அழைத்து நாள் நட்சத்திரம் பார்த்துதான் நுழைகிறான். இந்நாட்டில் தான் மூட நம்பிக்கை விஞ்ஞானத்தை ஆட்கொண்டுவருகிறது; நாள்நட்சேத்திரம் பார்த்து கடைக்கால் ஊன்றி கட்டப்பட்டு நல்ல முகூர்த்தம் பார்த்து வீட்டில் நுழைந்த வீடுகள்—கட்டடங்கள் இன்று பாழடைந்து குட்டிச்சுவராக யிருந்து வருவதைக் காண்கிறோம்.

இன்னொரு வேடிக்கை ஐரோப்பாவில் மூட நம்பிக்கை தலைவிரித்தாடிக்கொண்டிருந்தவரை அது முன்னேற்றமடையவில்லை; விஞ்ஞான ஆராய்ச்சி ஓங்கவில்லை. ஐரோப்பாவில் மூடக்கொள்கைகளுக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே சாவுமணியடித்தாய்விட்டது. ஆனால் நாம் இன்னும் அதற்கு அடிமையாயிருந்து வருகிறோம், அதனால் தான் அவர்கள் செல்வத்தில் புரள்கிறார்கள் நாமோ வறுமையில் வாடுகிறோம். நானா பார்னவிஸ் காலத்திலிருந்த நிலைமை தான் அறிவுவளர்ச்சி தான் இன்றும் இருந்துவருகிறது. விஞ்ஞானத்துறையில் நாம் மௌனம் சாதித்து வருகிறோம். கடந்த ஆயிரம் வருடமாக விஞ்ஞானத்திற்கு நாம் செய்த சேவை ஒன்று மில்லை யென்ற பெருமையில் தான் இருக்கிறோம். ஐரோப்பியர்களுடன் நமக்கு சம்பந்த மிருந்தும் நாம் இவ்வா

(இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# உழைப்பும் உழைப்பின் பயனும்

(காம்ரேட்)

சென்ற இதழில் 'புரட்சி' என்ற தலைப்பில் உழைப்பும் பொருளின் மதிப்பும் என்ற பொருளை விளக்கினேம். உழைப்புக்கும் பொருளின் மதிப்புக்கும் உள்ள வித்தியாசத்தை விளக்கினேம். இப்பொழுது இவ்விதழில் அதனுல் வரும் நிலைமையை விளக்குகிறேம். சிந்தித்துப்பாருங்கள்.

உழைக்கிறுன் ஆனல் உழைப்பின் பலன் முழுவதையும் அவன் அடைய முடியவில்லை. அப்பலனை இடையிலுள்ளவர்கள் அடைகிருர்கள். இது எவ்வாறு முடிகிறது? உழைப்புக்கும் பொருளின் மதிப்புக்குமுள்ள வித்தியாசத்தில் முடிகிறது. எனவே உழைக்கிறவன் நிலையுயர வேண்டுமாஞல், உழைப்புக்கும் பொருளின் மதிப்புக்கும் ஏற்றத்தாழ்வு இருத்தல்கூடாது. பொருளின் மதிப்புக்குத் தகுந்தாற்போல் மக்களின் வாங்கும் சக்தியும் உயர்வடைய வேண்டும் இதில் புரட்சிதோன்ற வேண்டும் என்று கூறுகிறேம்.

அடுத்தாற்போல் செல்வம்—பொருள் எவ்வாறு கிடைக்கிறது என்பதைச் சிந்தித்துப்பாருங்கள்.

தொழிலாளி உழைக்கிறுன் நிலத்தை வெட்டிக்கொத்தி பண்படுத்தி விதைத்து அறுத்து சேகரித்துத் தருகிறுன்; இது போலவே ஒவ்வொரு பொருளையும் ஆக்கித் தருகிறுன். இவ்வாறு ஆக்கித் தரும் பண்டங்களுக்கு ஒரு மதிப்பு தரப்படுகிறது. இந்த மதிப்பு நாணய வடிவில் விளங்குகிறது. இந்த நாணயந்தான் செல்வம்—பொருள் என வழங்கப்படுகிறது.

இதிலிருந்து உழைப்பின் பலன் தான் செல்வம் என்பது விளங்கும், உலகில் ஒரு சிலர் செல்வந்தர்களாகவும் பலர் வறியர்களாகவும் இருப்பதைக் காண்கிறேம். உழைப்புக்குத் தகுந்த பலன் இருக்குமேயாஞல் இந்நிலைமை ஏற்பட முடியுமா? இதில் ஏற்றத்தாழ்வு இருப்பதாலன்றே ஒருசிலர் மட்டும் செல்வந்தர்களாக இருக்க நேரிடுகிறது. எனவேதான் இந்நிலைமையில் புரட்சி, மாற்றம் தோன்ற வேண்டுமென்கிறேம்.

மற்றும், செல்வர்கள் எவ்வாறு தோன்ற முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒவ்வொருவனும் உழைக்கிறுன். அதற்குத் தகுந்த பலன் கிடைக்கிறது. அப்படியிருக்க, ஒருவன் அதிகமான பலனையும் வேருெருவன் குறைந்த பலனையும் அடைவதென்பது எங்ஙன முடிகிறது? சிந்தித்துப் பாருங்கள்.

அக்காளில் இப்பரந்த நிலப்பரப்பில் ஒரு பகுதியை ஒருவன் தனது குயுக்தியால் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டு அப்பகுதியில் மற்றவர்களை உழைக்கச் செய்து அவ்வுழைப்பின் பயன் முழுவதையும் அவன் அடைந்து வந்தான். இவ்வாறு ஒருவனே அடைந்து வந்ததினுல் தான் அவன் செல்வவானாக-பொருளுடையவனாக முடிந்தது. இதற்கு உதாரணமாக அக்காளில் மக்களை ஆடுமாடுகளைப் போல் விலைக்கு வாங்கி உழைக்கச் செய்து வந்த பழக்கத்தை எண்ணிப் பார்த்தால் விளங்கும்.

இப்பொழுது இவ்வாறு விலைக்கு வாங்கி உழைப்பை உறிஞ்சும் பழக்கமில்லையென்று சொல்ல முடியாது. அப்பழக்கமில்லாவிட்டால் எவ்வாறு ஒரு சிலர் பணக்காரராகவும் பலர் வறியர்களாகவுமிருந்துவர முடியும். பணம் என்றல் என்ன? உழைப்பின் பலனுக்குள்ள மதிப்புதானே? எல்லோருடைய உழைப்பின் பலனும் ஏறக்குறைய சமமானதாகவன்றே இருக்கும்? அப்பொழுது பணமும் சமமானதாகவே இருக்கவேண்டும்? ஒரு சிலரிடமட்டும் சேர்ந்து கிடக்கவும் பலரிடம் இல்லாதிருக்கவும் ஆன நிலை எப்படி ஏற்படமுடியும்? இது பொருள் உற்பத்தி சாதனங்கள் ஒரு சிலருக்கே சொந்தமானதாக இருப்பதால், பொருள் உற்பத்தி செய்கிறவர்கள் தங்கள் உழைப்பின் பலனை நேரடியாக அடைய முடியாமல் போய்விடுவதுடன் ஒரு சிலரே அடைய முடிகிறது. இதன் காரணமாகத்தானே, உள்ளவனுக்கு மேலும் மேலும் கொடுக்கப்படும் இல்லாதவனுக்கு அவனிடமுள்ளதும் பறிக்கப்படும் என்று ஒரு அறிஞர் கூறிச் சென்றுர்போலும். இதனல்தான் உற்பத்தி சாதனங்கள் ஒரு தனி மனிதனுக்குச் சொந்தமானதாகயிருத்தல் கூடாது பொதுவானதாகயிருக்க வேண்டும், அவனவன் உழைப்பின் பலனை அவனவன் அனுபவிக்கவேண்டும் என்று கூறுகிறேம். இது புரட்சியா என்பதை சிந்தித்துப்பாருங்கள்.

—

# தமிழா உன் கடன்!

(கோவிந்தகுடி A. H. சுல்தான்)

1. உரிமையோடு நாட்டையாள
உந்தி எழுதமிழனே!
அருமை தமிழை யாள்வதற்கு
உறுதி கொள்ளு தமிழனே!

2. அடிபணியும் கொள்கைதனை
அவனியிலே போக்கிடு!
இடிபடும் சமூகத்தை
இழுத்து முன்னுக்காக்கிடு!

3. பதவி பித்து பிடித்துநீ
பட்டம்பெற உழைக்காதே!
உதவிதேடும் உன் இனத்தை
ஒதுக்கிவைத்துப் பிழைக்காதே!

4. பகட்டு வார்த்தைக் காட்டியவர்
பல்லிளித்து அழைத்திட்டால்!
பொசுக்கடா அவர் புன்சிரிப்புப்
போக்கடா கொள்கையை!

5. மதியைவிற்று விதியைவாங்கி!
மாநிலத்தினுழலாதே!
சாதிபுகட்டும் கூட்டத்திற்கு
சாய்ந்தடுத்து வாழாதே!

6. சங்கத்தால் தமிழ் வளர்த்த
சிங்க கூட்ட மறவினர்!
பங்கம் வரதமிழை இழந்து
பாரினில் விழிப்பதா!

7. தட்டு தடுமாறி கல்வி
தவனறிந்து கற்றிட்டால்!
விடுதலைக்கு கெடுவலையாய்
வீணருக் குழைக்காதே!

8. மனிதனையே மடையனுக்கும்
மனிதனாக வாழாதே!
மனிதனையே, மனிதனுக்கும்
மனிதனாக வாழ்வீரே!

# மின்னல்

[பேகன்]

வசந்தம். எங்கும் இனிமை. இயற்கை தேவிக்கு வண்ணமடிட்டுகிறான் வசந்தன். காவிரியில் சருநீர், கடல் ஆரவாரத்தின் அணைப்பில் ஆழப் போகிறோம் என்ற எண்ணத்திலோ என்னவோ மிக்க அமைதியுடன் சென்றது. தேன்குயில் கூவிடும் மாஞ்சோலை. தென்றல இலைகளை முத்தமிடும் சப்தம். கிள்ளைகளின் காதல் மொழி. காற்றினில் தவழ்ந்து வரும் குழலின் கானம். காதலர்க்கேற்ற காலமிலே!

மாளிகையின் மேன் மாடியினின்று ஓர் கன்னி இயற்கையின் எழிலைக் கண்டாள். இன்பங்கொண்டாளில்லை. இன்பவுணர்ச்சிகளைப் பருகுதற்குப் பதில் ஏக்கமுடன் பெரு மூச்சுகளே வெளி வந்தன. எங்கெங்கிருந்த மேகக் கூட்டங்களெல்லாம் ஒன்று சேர்ந்தன. வானம் இருண்டது. இயற்கையே ஓர்கணம் திகைத்தது! சிந்தனையினின்றும் விடுபட்டு வானத்தை நோக்கினாள். சுற்றிலும் கருமேகக் கூட்டம் கூடாரமடித்தது போன்றிருந்தது பூமிக்கு.

பளீர் என ஓர் வெளிச்சம் வான மண்டலத்தில். "ஆகா! என்ன அழகு! எவ்வளவு இன்பம்!!" என்று அவளையறியாமலே அவள் வாய் முணுமுணுத்தது. ஆம்; வான மண்டலத்தில் ஓர் மின்னல் ஆனால் அவள் வாழ்விலும் அதைத்தானே அவளும் வேண்டினாள். மின்னல் மறைந்தது மின்விளக்கு ஏற்றப்பட்டது அதனால் மின்னலுக்குப் பின் தோன்றிய அந்தகாரத்தை அவள் காணவில்லை.

★ ★ ★

காஞ்சனா ஏழ்மைக்கு இரையான குடும்பத்தில் பிறந்தவளல்ல. அருணகிரி முதலியாரின் அருமைப் புதல்வியாக, ஏன்! மகனாகவும் வளர்ந்தாள். நீண்டநாள் குழந்தையில்லாக் குறையைத் தீர்த்து வைதது, அவரையும் தந்தை என்னும் ஆசனத்தில் அமர்த்தியவளும் அவளே.

செல்வத்திலே வளர்ந்தாள் காஞ்சனா. ஆனால் செருக்கென்ன என்பதையே அறியாள். காஞ்சனாவுக்குக் கல்வியறிவு வளர வழி செய்தார் பல வழிகளிலும் முதலியார். இன்பத்திலேயே வளர்ந்த அவள் துன்பத்தை அனுபவத்தில் அறியாள் இளமையை நன்றாக உணர்ந்து அனுபவித்தாள் அதன் பூரிப்பில் பசுங்கொடி யென்றே வளர்ந்தாள்.

இந்நிலையில் அவள் வாழ்வில் குறுக்கிட்டது ஒரு ஜீவன் ஆண்களுக்கு வேண்டிய அழகுடன் அறிவுமுள்ளவன் கருணாகரன். கருணாகரன் அருணகிரியின் அக்காவின் மகன் கல்லூரியில் பயிலும் மாணவன் கோடை விடுமுறைக்கு மாமாவின் வீட்டிற்கு வந்திருந்தான். அவன் சிறிவனாயிருந்தபோது ஒரு முறை வந்திருக்கிறான் அவனுடைய தந்தையின் உத்தியோகக் காரணமாக அதுவரை வர இயலவில்லை ஆனால் தந்தை இறந்த பிறகு இப்பொழுது அவனுடைய தாயுடன் வந்திருந்தான். வந்த இடத்தில் வகையான விருந்து இருப்பதைக் கண்டான்.

காவிரியின் சருநீர்ச்சுழலில் கருணாகரனின் கண்கள் பதிந்திருந்தன. சிந்தனைச் சுழலில் அவன் மனம் சிக்கியிருந்தது. வேறு சிந்தனை என்னவாயிருக்க முடியும், காதல் நினைவுகளைத் தவிர? "கல்லூரியில் எத்தனையோ கட்டழகிகள் உண்டு. ஆனால் காஞ்சனா காட்டு ரோஜா"—"அவள் அத்தான் என்று அழைக்கும் பொழுதே அன்பு சொட்டுமே"—"நாட்டுப் புறத்திலும் நல்ல அழகி"—"பட்டினப் பெண்டிர்க்கு வேண்டிய படிப்பு வாசனையும் துகர்ந்திருக்கிறாள்"—"என் வாழ்க்கையின் லட்சியம் நிறைவேறினால்.......?"—இவைகளே அவன் சிந்தனைகளாக இருந்தது.

அதே நேரத்தில் இருமலர்க்கரங்கள் அவன் கண்களை மூடின மூடிய கரங்களை இருக்கிப் பிடித்தது இரும்புக் கரங்கள். அத்துடன் கருணாகரனின் வாய் "காஞ்சனா உன்னைத் தெரியாதா" என்ன என்று முணுமுணுத்தது அதற்குப் பதில் கலகல என்ற அவளுடைய சிரிப்பே!

நான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும் அத்தான்? உன்னையன்றி வேறு யாருக்குண்டு இம்மலர்க்கரங்கள்? உங்கள் இரும்புக் கரங்கள் போலவே உங்கள் மனமும்........? இரும்பென்று தானே சொல்கிறாய் காஞ்சனா? இருந்தால் என்ன உன் மனம்தான் காந்தமாயிற்றே!

காந்தம் இரும்பை இழுக்குமே!

இழுத்துக்கொண்டுதானே இருக்கிறது?

சுத்தப்பொய் இல்லவே இல்லை!

அப்படியா? இதோபார்........

அவள் அருகில் அவன். அவன் அணைப்பில் அவள் இதழ்கள் இன்ப முத்தங்கள் பருகின. காதல்விதை சிரித்துக்கொண்டே முளைத்தது!

"சின்னம்மா"-என்ற குரல் கேட்டு திடுக்கிட்டு எழுந்தாள் "அத்தான் என்னை மறக்கமாட்டீர்களே! என்று கேட்டுக்கொண்டே வேலைக்காரி அங்கு வருவதற்குள் காஞ்சனா அவளையடைந்து விட்டாள்.

இரவு, மாலை நேரத்தில் சோலை மறைவில் நடந்த நிகழ்ச்சிகளை எண்ணி எண்ணி மகிழ்வதிலேயே கழிந்தது கருணாகரனுக்கு.

மறுநாள் கருணாகரன் தன் தாயுடன் தன்னூர் வந்து சேர்ந்தான மனவிருப்பமின்றியே கல்லூரிபோக வேண்டுமென்ற காரணத்தால்.

திடீரெனத் திருமணம் நிச்சயமாகி விட்டது காஞ்சனாவுக்கு. அவளுடைய காதல்....? எதிர்கால இன்பலட்சியங்கள்...? எல்லாம் பாழாயின கருணாகரனுக்கும் ஒரு கலியாண கடுதாசி அனுப்பப் பட்டது. வாழ்வில் புயல் வீசிவிட்டது என்பதை எண்ணி கருணாகரனும் வாளாவிருந்து விட்டான். பொருந்தா மணம்—இது காஞ்சனாவின் தீர்ப்பு.

★ ★ ★

காஞ்சனா! என்றது கருணாகரனின் குரல் சற்றும் எதிர்பாராதவளாய் திரும்பிய காஞ்சனாவின் கண்கள் அகல விரிந்தன கருணாகரனைக் கண்டதால்.

நீ எப்பொழுது வந்தாய் அத்தான் அம்மாவும் வந்திருக்கிறார்களா?

நான் இப்பொழுது விவசாய இலாகாவில் டிமான்ஸ்ட்ரேடர் இந்த ஊருக்கு மாறுதலாகியிருக்கிறது. உன் கணவர் எங்கே?

அவர் வெளியூருக்குச் சென்றிகிறார்.

நீ வெட்டவெளியில் எதைப்பார்க்கிறாய்! பெரிய கவிபோல் சிந்தனை உலகில் நடமாடுகிறாயா என்ன காஞ்சனா?

அத்தான், நான் இப்பொழுது ஒரு பெரிய கவியாகி விட்டேன். என் வாழ்வே, வாழ்வில் நடந்த சோக நாடகமே என்னைக் கவியாக்கி விட்டுவிட்டது. வான மண்டலத்தைப்பார், ஒரே இருட்டுத்தானே. நம் வாழ்வையும் பார், இங்குமட்டும் என்ன ஒளி வீசுகிறதா?

இது என்ன 'லெக்சர்' செய்ய ஆரம்பித்து விட்டாயா? இன்னும் கேள். நம்வாழ்வும் ஒரு வானமே அங்கே மேகக் கூட்டங்கள்; இங்கே சிதைந்த எண்ணங்கள் மேகக் கூட்டம் இடிகளை உண்டாக்குகின்றன. இங்கே கருகிய எண்ணங்கள் பேரிடிகளை ஏற்படுத்தி விட்டன. ஆனால்

(இதன் தொடர்ச்சி 6-ம் பக்கம்)

கோழி கூவிற்று! வையம்,
கொண்டதோர் இருளைத், தங்க
மேழியால் உழுதான் அந்த
விரிகதிர்ச் செல்வன்; பின்னர்
ஆழிசூழ் உலகின் காட்சி
அரும்பிற்று! முனைய விழ்ந்து
வாழிய வைய மென்று
மலர்ந்தது காலை வானம்!

—புரட்சிக்கவி பாரதிதாசன்


# உதயம்

மலர் 1 24—11—46 இதழ் 17


# அறிக்கைமட்டும் போதாது

"ஓ! என் சகோதரரே!
ஒன்றுக்கும் அஞ்சாதீர்!
காவலம் தீவு நமைவிட்டுப்
போகாது,
வாழ்கின்றார் முப்பத்து முக்
கோடி மக்கள் என்றால்,
சூழ்கின்ற பேதமும் அந்தத்
தொகையிருக்கும்,
ஆகையால் எல்லாரும் அங்கே
தனித்தனி தான்."

என் ஆங்கிலேயன் எண்ணி வருகின்றான் என்று கூறினார் நமது உயிர்க் கவிஞர் பாரதிதாசன் அவர்கள். இன்றும் இந்நாட்டில் நிகழும் நிகழ்ச்சிகளை கண்ணுற்றால் இதைத் தான் வலியுறுத்துவதாகவே தெரிகிறது. ஆங்கிலேயன் இதே எண்ணத்தில் ஊறிப்போய் விட்டான்,, இந்நம்பிக்கையில் உறுதியா யிருக்கிறான் என்பதை கடந்த சில மாதங்களாக அரசியல் பேரால் அவன் ஆடும் ஆட்டங்களைப் பார்த்தால் விளங்கும். நமக்குள் ளிருக்கும் பேதங்கள் நாளுக்கு நாள் வளர்கிறதே யல்லாது குறைவதாகத் தெரியவில்லை; இப்பேதங்களுக்கு நெய்யூற்றி வளர்த்து வரப்படுகிறது. இதை நம்மவர்கள் உணர்வதில்லை; உணர்ந்ததாகவும் தெரியவில்லை. நாட்டிலே மனக்கசப்பும் துவேஷமும் அதிகரித்துக் கொண்டே, வருகிறது. சாதிச் சண்டையும், சமயச் சண்டையும், கட்சிச் சண்டையும் பெருகிக் கொண்டே வருகிறது.

உலகில் வேறு நாடுகளில் பல சமயங்களைக் கொண்ட மக்களும் வாழ்கிறதில்லையா? அங்கெல்லாம் இவ்வாறு சண்டை போட்டுக்கொண்டு அன்னியனுக்கு அடிமையாகவா யிருக்கின்றனர் என்பதை எண்ணிப் பார்ப்பதில்லை. அந்நாடுகள் எவ்வாறு சுதந்திரமாக ஒரே இனமாக வாழ்கின்றன என்பதைச் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

ஆரியம் இந்நாட்டில் புகுந்த போழ்து, அது நிலைத்திருப்பதற்காக பலசாதிகளைப் புகுத்தி மக்களுக்குள் சாதி வேற்றுமையை யுண்டுபண்ணி வந்தது. இவ்வாறு மக்களைப் பிரித்து வைத்தால் தான் ஆரியம் ஆதிக்கம் செலுத்த முடியும் என்று எண்ணியது; இதில் வெற்றியும் பெற்றது. ஆனால், தாழ்வுற்ற திராவிடம் தனது தாழ்வுக்கு எது காரணம் என்பது பற்றி ஒரு சிறிதும் எண்ணிப் பார்க்கவுமில்லை, கவலை எடுத்துக்கொள்ளவுமில்லை. எண்ணிப் பார்ப்பதற்கே சிந்தனை சக்தியே யில்லாது செய்துவிட்டது ஆரியம். இதையும் நமது கவிஞர் அவர்கள்,

"சிந்தனை சக்தி சிறிது
மின்றி மக்களுக்குத்

தம் தோள் உழைப்பிலே
நம்பிக்கை தானுமின்றி,

ஊறும் பகுத்தறிவை
இல்லா தொழித்துவிட்டு"

என்று விளக்கியிருப்பதி லிருந்தும் தெரிந்துகொள்ளலாம்.

இந்த முறையைத் தான் ஆங்கிலேயரும் இன்று கைக்கொள்கிறார்கள். சாதிப் பிரிவுகளுடன் சமயப் பிரிவுகளையும் புகுத்தி இவ்விரு சண்டைகளையும் பக்குவமாக வளர்த்து வருகிறார்கள். இன்று நாட்டில் நடைபெறும் கலகங்கள் எதன் காரணமாக யிருக்கின்றன? வங்காளத்திலும், பீஹாரிலும், பம்பாயிலும் நடைபெறும் கலவரங்கள் சமயத்தின் காரணமாக அதாவது இந்து சமயம், இஸ்லாமிய சமயம் என்ற காரணத்தால் இருசமய மக்களுக்குள் ளிருக்கும் வேற்றுமையின் காரணமாக அவநம்பிக்கையின் காரணத்தால் நடைபெறவில்லை யென்று யாரால் மறுக்க முடியும்?

தென்னாட்டில், அதுவும் தமிழ் நாட்டில் இத்தகைய சமயவேற்றுமைகள்—சமயச் சண்டைகள் அதிகமில்லா திருக்கிறதென்றாலும் சாதிச் சண்டைகளுக்குக் குறைவே யில்லை., சாதிச் சண்டையிலே தமிழ் நாடு பேர்போனதாக ஆகிவிட்டது. இருந்தாலும் சமய சண்டைகள் அதிகமில்லை; சமயத்தை சமயம் அழிக்க முற்பட்டிருக்கிறது என்பதற்கு நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றனவே யல்லாது, மக்களுக்குள் சமயச் சண்டைகள் தோன்றியதாக கூறுவதற்கில்லை. காரணம் திராவிட மக்கள் சமயங்கள் யாவும் பொது, எவர் எந்தச் சமயத்தைத் தழுவி யிருந்தாலும் சரி என்ற நோக்குடன் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இதற்கு பல சான்றுகளை எடுத்துக்காட்டமுடியும். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பற்பல சமயங்களை தழுவிக்கொண்டிருந்ததைக் காணலாம். இனறும் இலங்கை முதலிய பகுதிகளில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் பல சமயங்களைப் பின்பற்றி வருவதை காணலாம். எனவே, திராவிட நாட்டில், சமய வேற்றுமையை அதிகமாகக் காணமுடியாது. திராவிட நாட்டு மன்னர்கள் பல சமயத்தைச் சேர்ந்தவர்களை தங்களுக்கு அமைச்சர்களாக வைத்திருந்ததாகவும் தெரியவருகிறது. ஆனால், இங்கும் சமய வேற்றுமையை உண்டு பண்ண பலமான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. நாட்டின் நலத்தில்—விடுதலையில் கருத்துடையவர்கள் கண்டிப்பாக எச்சரிக்கையாக் யிருந்து மக்களை நேறிய வழியில் நடத்திச் செல்ல வேண்டும். இந்த முறையில், இம்மாகாண முதலமைச்சர் தோழர் பிரகாசம் அவர்களும் மாகாண முஸ்லிம் லீக் தலைவரும் சேர்ந்து அறிக்கை வெளியிட்டிருப்பது பற்றி நாம் மகிழ்ச்சி யடைகிறோம். பொறுப்புள்ளவர்கள், இன்றைய நிலையில் இதைத்தான் செய்ய வேண்டும். மக்களுக்குள் துவேஷத்தையும் பகைமையையும் வளர்க்கச்கூடிய எந்தக் காரியத்திற்கும் இடந்தரலாகாது. ஆனால், சில பத்திரிகைகளின் போக்கு நமக்கு அதிக கவலையைக் கொடுக்கக்கூடியதாகவே யிருக்கிறது. இவ்வகளின் எழுத்துக்களை டார்ப்பவர்களுக்கு நாம் சொல்வதின் உண்மை விளங்காமல் போகாது. இவைகளின் போக்கைத் தடுத்தாக வேண்டும்.

வெறும் கூட்டறிக்கையினால் மட்டும் எதுவும் சாதித்துவிட முடியாது. நாட்டில் சமய வேற்றுமையை வளர்க்கும் காரியம் பல நடக்கின்றன. இவைகளுக்கு சில பத்திரிகைகள் தூபமிட்டு வருகின்றன. இதை முன்னெச்சரிக்கையாக யிருந்து தடுக்க வேண்டும். இதை மாகாண முதலமைச்சர் செய்ய முன் வருவாரா என்பதுதான் இப்பொழுதுள்ள கேள்வி. அப்பொழுதுதான் இவர்கள் உண்மையிலே நல்லெண்ணத்துடன் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள் என்று கருதமுடியும். பொறுத்திருந்து பார்ப்போம்.

## புது மேயர்

சென்னை கார்ப்பரேஷன் மேயராக பிராமணரல்லாதார் கட்சியில் தோழர் T. சுந்தர ராவ் நாயுடு அவர்கள் இவ்வருடம் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்பதை யறிய மகிழ்ச்சியடைகிறோம். அவருக்கு நகர பரிபாலன சப்பந்தமான அறிவு அதிகம் உண்டு. நல்ல அனுபவம் உண்டு. பொதுவாக நகர பரிபாலன சபைகளில் அங்கம் வகிப்பவர்களுக்கும் தலைவர்களாக வருபவர்களுக்கும் பொது மக்களின் கஷ்ட நஷ்டங்களை நன்கு உணரக்கூடிய திறமையும், அதில் பங்கு கொள்ளும் ஆற்றலும், பொது மக்களின் வாழ்வு முன்னேறுவதில் உண்மையான ஆர்வமும் யிருத்தல் வேண்டும். எடுத்தக் காரியத்தை உறுதியுடன் செய்து முடிக்கும் தன்மை பெற்றிருக்க வேண்டும். இந்த குணங்கள் யாவும் தோழர் T. சுந்தர ராவ் நாயுடு அவர்களிடம் காணலாம். இதற்கு முன்னதாகவே, இவர் மேயராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும். இருந்தாலும் இப்பொழுதாவது தெரிந்தெடுக்கப்பட்டார் என்பதை யறிய உள்ளபடி அவரை பாராட்டி வரவேற்கிறோம்.

நகரசபைகள் கவனிக்க வேண்டிய விஷயங்கள் கல்வி, சுகாதாரம், போக்கு வரவு சாதனங்கள், விளக்கு வசதிகள், குடி தண்ணீர் வசதி முதலியவைகள். இவைகள் யாவும் சௌகரிய முள்ளவர்களுக்கு பணம் படைத்தவர்களுக்கு குறைவாயிருக்காது; தாராளமாக கிடைக்கும். ஆனால் சௌகரிய மில்லாத ஏழை மக்களுக்குத்தான் இத்தகைய சௌகரியங்கள் கிடைக்கா, தேடிக்கொள்ளமுடியாது. அவர்களுக்குக் கிடைக்குமாறு அதாவது ஏழை மக்கள் வசிக்குமிடம் சுகாதார விதிகளின் படி சுத்தமாக யிருக்கின்றனவா? சாக்கடை வசதி, விளக்கு வசதி, குடி தண்ணீர் வசதி முதலியவைகள் இருக்கின்றனவா? பிள்ளைகளை படிக்க வைக்க சௌகரியங்கள் இருக்கின்றனவா? என்பவைகள் கவனித்து அவைகளுக்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டியது தான் நகரசபைகளில் பிரதிநிதிகளாகச் செல்லுபவர்களின் பொறுப்பும் தலைவர்களாக வருபவர்களின் பொறுப்புமாக யிருக்கவேண்டும். இதைத்தவிர நிர்வாகத்தைப் பொறுத்த மட்டில் இவர்கள் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. அதை நிர்வாக அதிகாரி கவனித்துக்கொள்வார். ஆகவே, நகர சபைகளில் பிரதிநிதிகளாக செல்பவர்கள்—தலைவர்களாக வருபவர்கள் தங்கள் முக்கிய கடமை என்ன? தங்களிடம் பொது மக்கள் அதிலும் குறிப்பாக ஏழை மக்கள் எதிர்பார்ப்பது என்ன? என்பதை எண்ணிப் பார்த்து நடந்து கொள்ளவேண்டும். இந்த முறையில் தோழர் டி. சுந்தர ராவ் நாயுடு அவர்கள் தமது மேயர் பதவி காலத்தில் தம் கடமையை யுணர்ந்து ஏழை மக்களின் வாழ்வு உயர பாடுபடுவார் என்று நம்பி அவரை வாழ்த்தி வரவேற்கிறோம்.

## மானக்கேடல்லவா ?

இந்தியா நாகரீகமுள்ள நாடு. உலகில் ஏனைய நாடுகள் காட்டுமிராண்டி தனத்திலிருந்த காலத்தில் இந்தியா உயர்வடைந்திருந்தது. இந்நாட்டின் சிறப்பைக்கண்டு ஏனையநாட்டு மக்கள் கண்டு வியப்படைந்து வந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. அவ்வளவு சிறப்படைந்திருந்த-நாகரிக மடைந்திருந்த நாட்டு மக்கள் தான் இன்று உலகில் காணமுடியாத இழிநிலையிலிருந்து வருகிறோம். மக்கள் மாடுகளைப்போல் வண்டியிழுக்கும் கோரக் காட்சியை இங்குகாண்கிறோம். மக்கள் நாடோடிகளாக குந்த இடமில்லாமல், உடுத்த உடையில்லாமல்; உண்ண உணவில்லாமல், நாயுடனும் பேயுடனும் போரிட்டு கொண்டிருப்பதை நாம் அன்றாட வாழக்கையில் கண்ணால் பார்த்துக்கொண்டு வருகிறோம்.

மேல் நாடுகளில், இந்த நாட்டில் குருவிக்கார கூட்டம்போல் 'ஜிப்சிஸ்' என்ற கூட்டம் இருந்துவருகிறது. அதற்கு அந்த நாட்டுச் சர்க்கார் ஆடையும், உணவும் இன்னும் பிற வசதிகளையும் கொடுத்து வருகிறது. பிற நாகரீக மக்களில் ஒன்றாக இன்று அவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டுவருகிறார்கள். ஆனால் நம் நாட்டிலோ கர்மத்தைக் காட்டி அவன் தலைவிதி என்று மதத்தின் பேரால் மடக்கி, நம்போன்ற மனிதனை மனிதனாக பாவிக்காமல் நாயினிடத்தில் போராடும் நிலையில் விட்டு நாம் வாழ்கிறோம். இது மனிதத்தன்மையுடையதா? மானிடனுக்கு அடுக்குமா? என்று கேட்கிறோம் என்றாலும் இங்கு மனிதன் என்ன சொல்லுவான் என்றால் நம் நாடு அடிமை நாடு என்றும், நாம் விடுதலைப்பெற்றால் தான் வழி பிறக்குமென்றும் ஒரு நொண்டி சமாதானம் சொல்லி தப்பித்துக் கொள்ளுவான். நாம் கேட்கிறோம் இன்று ஆட்சிநடத்தும் கட்சி ஜனநாயக சர்க்கார் என்றும் விடுதலை பெறும் வழியில் நிற்கும் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றும் அடிமைத்தளையைத் தகர்த்து, ஆங்கிலேயனை விரட்டி விடுதலை பெறுவதோடு மட்டல்லாமல் எல்லாரும் இந்நாட்டு மன்னர்கள் என்றும் பறை சாற்றி வந்தார்கள். பொது மக்களின் ஓட்டைப் பெற்று, மந்திரிகளாய் இருந்து, நம் இன்றைய சக்காரை நடத்தும் கட்சியைக் கேட்கிறோம், இந்நாட்டில் நம் போன்ற மனிதர்களான 'குருவிக்காரன்' என்று அழைக்கப்படும் சமூகம் உண்ண உணவின்றி உட்கார இடமின்றி நிற்க நிழலின்றி தவித்துக்கொண்டு தரையையே பாயாககவும் ஆகாயமே மேல் கூரையாகவும் வாழ்ந்து ஒரு இடத்திலும் நிலையின்றி தவிக்கும் மக்கள் நிலையை எந்த கட்சி தலைவர்களோ அல்லது! மகாத்மாவின் மகாத்மியம் பெற்ற காங்கிரஸ் மந்திரிகளோ இன்று வரை ஏதாகிலும் மனித அபிமானத்தோடு இவர்களைக் குறித்து ஏதாகிலும் ஒரு திட்டம் செய்ததுண்டா என்று. இந்த நிலையில் பொது ஜன சர்க்கார் என்று சொல்லிகொள்வதில் சிறிதாவது அர்த்தமிருக்கிறதா?

அதுமட்டுமல்ல, நாகரிக நாடென்று சொல்லிக்கொள்ளும் ஒரு நாட்டுக்கு இதுபோன்ற மக்கள் வாழ்வது அதுவும் மனிதனை மனிதன் மாடுபோல் இழுத்துச் செல்ல அனுமதித்துக் கொண்டிருப்பது, மக்கள் உண்ண உணவில்லாமல், நாயுடனும் காக்கை குருவியுடனும் எச்சலைக்குப் போராடுவதையும் பார்த்துக்கொண்டிருப்பது அழகா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதற்குக் காரணம் என்ன? இதைக் குறித்துநாம் இப்பொழுது விளக்க பிரியப்படவில்லை. நாம் விளக்க விரும்புவதெல்லாம், இனியும், இவ்வாறு மக்களை மாடுபோல் நாய்போல் வாழவிடக்கூடாது என்பதுதான். இது பற்றி சென்னையில் ரிக்ஷாக்காரர்களின் குறைகளை விசாரிக்க நியமனம் செய்யப்பட்ட விசாரணைக் கமிட்டியார், ரிக்ஷாக்காரர்களை அத்தொழிலிருந்து விடுவிக்க வேண்டும், அவர்களுக்கு வருடா வருடம் புதுத் தொழில் தேடித்தர வேண்டும் என்று சிபார்சு செய்திருப்பதை சர்க்கார் ஆலோசித்துப் பார்த்து, இவ்விழிவைப் போக்க பாடுபட முன்வர வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

## மின்னல்

அங்கும் ஓர் வெளிச்சம் அதுதான் **மின்னல்** தோன்றுகிறதே அப்பொழுது பார்த்தாயா இருட்டு கிழித்தெறியப் படுவதை?

என்ன காஞ்சனா என்னால் புரிந்து கொள்ள முடியவில்லையே உன்னை? இன்னுமா?.......ம், உன்னைக் காணத்தானே துடித்துக் கொண்டிருக்கிறது என் இளமை நம் வாழ்விலும் மின்னல் வேண்டாமா?

காஞ்சனா புரிந்தது. நீ என்ன செய்வாய் பணத்திற்காக உன் இளமை பலியிடப்பட்டுவிட்டது தங்கப் பல் கட்டிய இளைஞருக்கு! ஆனால் மின்னலுக்குப் பின் சூழும் அந்தகாரம் உன் கண்களுக்குத் தெரியவில்லையா காஞ்சனா?

தெரிகிறது இருந்தால் என்ன அந்த மின்னலில் உலகத்தையே மறந்து விடலாமே!

திடீரென மறுபடியும் ஒரு கொடி மின்னல் கண்களைப் பறிக்கும்படி மின்னியது அதன் ஒளியில் மின் விளக்கு அவிந்து விட்டது.

ஒரு பெருமூச்சு ஈருடல் ஓரே பிணைப்பில் அதில்தான் எத்தனை இன்பம்!!!

இனி அவர்கள் வானத்தில் இடைவிடாது மின்னல் ஒளியில் தம் கண்களின் ஒளியை இழந்து அந்தகாரத்தை அகற்றிவிட்டாரே!

## வாழ்க்கை ஒப்பந்தம்

1—12—16 காலை 9½-மணிக்கு ஸ்ரீரங்கம் காந்திரோடு A. K. இராமசாமியார் தோட்டத்தில்,

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமையில்

நடிகமணி, தோழர்

டி. வி. நாராயணசாமி அவர்களுக்கும்

தோழியர்

பாப்பா அம்மையார் அவர்களுக்கும்

வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும்

தோழர்கள், T. P. வேதாசலம் N. சங்கரன், V. சின்னத்தம்பி, K. அன்பழகன், E. V. K. சம்பத், காஞ்சி கல்யாண சுந்தரம், ஈழத்தடிகள் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர். அன்பர்கள் வருக.

**C. N. அண்ணாதுரை.**

## "உதயம்"

சேலத்தில் போட்டோ ஸ்டோர்ஸ் K. K. நாயுடு அவர்களிடமும், அம்மாபேட்டை மெயின் ரோடு தாம்பூலக்கடை தோழர் S. V. வெங்கடசாமி அவர்களிடமும் கிடைக்கும்.

சிங்கப்பூரில் கார்த் பிரிட்ஜ் ரோடு; ராயல் கொட்டகைக்குப் பக்கத்தில் 633-ம் எண்ணுள்ள அகமடியா ஹவுஸில் கிடைக்கும்.

# ★ யாரது? என் அன்னையா! ★

(வில்லை கு. இராவணன்)

யாரது? என் அன்னையா! ஏனிந்தக் கோலம்! அன்னையே எங்கே உன் அணிகலன்கள்? எங்கே உன் கவலை ஆபரணங்கள்? எந்தக் கள்வன் உன் ஆடை அணிகளைப் பறித்தவன்? உன் செல்வம் எங்கே? வளமிக்க உன் வாணிபம் வடவனுக் கடிமை ஆயிற்றோ? அந்தோ! கடல் கடந்து வாணிபம் செய்து திரைகடலோடித் திரவியம் தேடிய உன் திருச்செல்வர் எங்கு மறைந்தனர்? உன் செல்வம் பறிக்கப்பட, நீ பார்ச நோயாற்றுக்குண்டு, மழையிலும், குளிரிலும் வாடி அல்லலுற்று, இருளில் வழி தெரியாது தடுமாறுகின்றனையே! மணிமுடி சுமந்து அரியாசனத்தமர்ந்து வீரச் செங்கோலேந்தி, அவனி அனைத்திலும் ஆணை செலுத்திய அருந்தமிழன்னையே! உன் பெருந்திறனெலாம், எங்கே ஓடி மறைந்தன? கலை பூண்ட உன்பரந்த மேனியினை என் தாயே! கடற்கோளும் வஞ்சக வடவர் சூழ்ச்சியும், காலத்தால் செல்லும் அரிக்கவா நேர்ந்தது?

நின் மக்களாம், இத்தமிழர் கண்களுக்கு முன்னரே இவ்வளவும் நிகழ்ந்திருந்தும் தாயே! என்ன செய்தனர் என் மறத்தமிழர் குடித்தோன்றல்கள்? உறக்கத்தில்தான் உயிர்த்திழிந்தனரா? ஐயகோ! தமிழன் உறக்கம் இவ்வளவா நீண்டிருந்தது! மானமிழந்தால் வாழாக் கவரிமான் அல்லனோ தமிழன்? தாய்க்குப் பங்கம் வரும் வரைத் தரணியில் உயிர் வாழ்ந்தான் தமிழன், என்ற தவறான பழிச்சொல்லுக்குத் தமிழனுமா ஆளாகும் நிலை வந்துற்றது? என் செய்வேன்? வடவர் கூறிய மானக் கேட்டைப் பொறாது, வெற்றி சொட்டும் திண்தோன் தமிழ் வேந்தன் இமயத்தைத் தூக்கி, எஃகு உள்ளத்தில் தாண்டவமாடும் வஞ்சக வடிவ, வடிவரைவென்று நின் கற்புடைபபொற்பின் செல்வி கண்ணகிக்கும் கல்கொணர்ந்து, மானம் காத்த மரபாமே, இம்மரபு? ஈழமும், கடாரமும், இன்னும் பல சுற்றுப்புற நாடுகளனைத்தையும் வென்று வாகைசூடி ஒப்பிலாத் தமிழாட்சியை, உலகெலாம் நிறுவி உலகுக்குரிய உயர்பொதுமை நீதியைக் கற்பித்த என் அன்னையே? எங்கே உன் செல்வர்கள்? உன் உடல் நோய் நீக்க உற்றார் இல்லைபோலும் அன்னையே. ஆ! மருத்துவக் கலையில் துறைபோகிய மாதேவி! மருத்துவமும் மறந்தனையோ? மருந்துக்கும் உதவா மறத்தமிழர் ஆயினரோ? நோயால் உடலும், உன் உள்ளமும், உயிருமாத்தாக்குண்டன? என் என்பேன் இன்னிலை யினை!

அன்னையே! உங்கள் கண்களில் வழியும் கண்ணீரைத் துடைக்க வல்ல தமிழன் இங்கு யாருமா இல்லை? அன்னையே! கலங்காதீர்கள். இதோ ஒரு கூட்டம் தமிழ் முரசு கொட்டுகிறது. இதோ ஒரு சிறு கூட்டம் பேரொலி செய்கிறது. இதோ ஒரு கூட்டம் புரட்சி! புரட்சி! எனப் புகல்கின்றது. குயிலொன்று நெடுந் தொலைவில் கூவுகிறது. அன்னையின் நினைவு மறந்திருந்து ஆயிரக் காக்கையைத் தாயென எண்ணியிருந்து, விழிப்புற்ற ஒரு இளந் தமிழ்க் கருங்குயில் நல்ல இளமையுடன் உறுதி பூண்டகுயில் தமிழர்களைக் கூவியழைக்கிறது, மறப்போரில் மாற்றலரை உங்கள் முன் மண்டியிடச் செய்ய தங்கள் கண்களிலிருந்து பீரிட்டெழும் இரத்த நீர்த்துளிகள் ஒவ்வொன்றும் வீறுகொண்ட தமிழனின் இதயத்தில் சென்று தோய்கின்றன. தங்கள் அழுகைக் குரலின் ஒவ்வொரு சொல்லும் தமிழனின் செவி வழி அவன் உள்ளத்தில் பேரெதிரொலி செய்கின்றது.

ஆரியத்தின் அணைப்பிற் கட்டுண்டு அகமிக மகிழ்ந்து அதுவே தன் குறிக்கோளென எண்ணிய தமிழன் அதன் வஞ்சக சூழ்ச்சி வலையை—வலையை யறிந்து கொண்டான். தீப்பொறி பறக்கும் திருத்தோள்கள் உயர்ந்து கூத்தாடுகின்றன. புரட்சிக்கனல் பூத்துவிட்டது. சாவம் பூத்த நெருப்பு ஒளிரத்து வங்கி விட்டது. தமிழனின் உழைப்பை உண்டு உப்பிய ஆரியம் ஒளியில் இழுத்து விடப்பட்டு விட்டது. தொழில் செய்து இரத்தம் சிந்திய தமிழன் கைகள் இனிச் சும்மாயிரா! அச்சமில்லை, அச்சமில்லை, 'என்று அன்று ஒரு புலவன் அறைகூவினன். ஆனால் ஆரியமும் அது கண்டு அஞ்சவில்லை. கொலை வாளினை எடுத்துக் கொலைக்களம் புகுந்து கொடியோர் செயலை அறுத்தெறியக் கட்டளையிட்டு விட்டது, கருஞ்சட்டை போர்த்த புதுவைப் புதையல். இனி, எழுச்சியுற்ற தமிழரை நசுக்க என்ன செய்யினும் ஆரியம் தோற்றே தீரும். தமிழ் என்றால் வெற்றி என்ற பொருள் வலியுறுத்துமளவு தமிழர் வெற்றி பெற்றுவிட்டனர். கலங்கும் ஆரியம் காளைகளை ஏவ அஞ்சுகிறது. கன்னியரை ஏவித் தமிழ்க்காளைகளைக் கைவசப் படுத்த முடியாது. பிரகலாதர்கள் இல்லாமையால் ஆரியம் கரைகிறது. இரணியப் பெரியார் ஈரோட்டு இராமசாமியாரின் புதல்வர்கள் ஆரியத்தை வெறுத்து அருந்தமிழன்னை அடிகளைப் போற்றும் தகையர்கள். ஆதலின், என் அன்னையே! அஞ்சாதீர்கள். இதோ முகிலைக் கிழித்து வெளிவரும் முழுமதியெனத் தமிழா எறுகள் கூட்டம் வெள்ளம்போல் வீதி தோறும் புறப்பட்டுவிட்டன. ஆரியக் கட்டிடத்தின் அஸ்திவாரம் வேருடன் பெயர்க்கப்படுகிறது. தமிழன் செய்த கருவிகளைத் தமிழனே பயன் செய்யப் புறப்பட்டு விட்டான். ஆரியம் அழிகிறது. தமிழன் உண்டாக்கிய நெருப்பு ஆரியத்தைக் கொளுத்திப் பொசுக்கப் பயன் படுகிறது. தமிழன் சிந்திய இரத்தம் இன்று ஈடு செய்யப்படுகிறது. ஆரியம் இரத்தம் சிந்தத் தமிழன் அதை ஏந்தி மகிழமனங் கொண்டு விட்டான். தமிழனைத் தடை செய்ய யாராலும் முடியாது. தமிழன் தமிழ்தேன் பருகி அசதி போக்கித் தோள் தூக்கி வீரப்போர் செய்யும் இக்களத்தில் அன்னையே! அலமருதீர்கள்! அவனியை வென்றுத் தங்கள் அடிகளில் வைக்கவே தமிழன் அரும்பாடுபடுகிறான். ஆதலின் என் அன்னையே! சற்று ஓய்வு கொண்டு அமர்ந்திருங்கள். போர்க் களத்தில் புறமுதுகிடாத் தமிழரின் வீர அமர்க்களத்தைக்கண்டு உன் அரும் புதல்வரை ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும் வாய்ப்பு பெற்ற என் அன்னையே! அதோ! ஆரியம் அலற கூவுகிறது. போருக்குப் போகிறேன். வெற்றி நோக்கிக் காத்திருங்கள். தீமையை எதிர்த்துப் புரட்சி செய்து புது உலகு ஆக்கப்போகிறோம். அன்னையே! போருக்குப்போய் வருகிறோம்.